[1999 மார்ச் 23

ஆலோசனையைப் பெற்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 160, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

160—

திருத்தணி நகரைச் சுற்றுலா மையமாக்குதல்

***15900—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இந் நகரில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணிக்கு அன்றாடம் ஆன்மீக வழிபாட்டுக்காக ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் திருத்தணி நகரின் மையப் பகுதியிலே நல்ல தண்ணீர்குளம் என்ற என்றுமே வற்றாத தடாகம் அமைந்திருக்கிறது. அங்கே படகுக் குழாம்கள் அமைக்கலாம். அதேபோன்று கன்னிகோயில் என்ற மற்றொரு இடத்திலே சூரிய ஒளிகூட நிலத்திலே விழாத அளவிற்கு ஒரு பசுமையான சோலை அமைந்திருக்கிறது. அதையும் பயன்படுத்திக் கொண்டு— நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை-திருத்தணி-திருப்பதி மாநில நெடுஞ்சாலையை, தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிக் கொடுத்து பெருமை சேர்த்திருக்கிறார்கள்—இந்த நிலைமையிலே

1999 மார்ச் 23]

"செல்லார்பொழில் சூழ்ந்த திருத்தணிகையிலே" சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து சுற்றுலாத்தலம் அமைத்திட அரசு மீண்டும் முயலுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விழைகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலம் என்று அறிவிப்பது கிடையாது. சுற்றுலாப் பயணிகளுடைய வருகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது சுற்றுலாத் துறையினுடைய கடமையாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, திருத்தணியைப் பொறுத்தவரையில் அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மேலும் பல அடிப்படைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு மாவட்ட நிர்வாகத்தோடு கலந்து பேசி கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆரூண் ரஷீத், திருத்தணியைப் பற்றிக் கேட்கப் போவதாக இருந்தால் கேளுங்கள்.

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் செங்குன்றம் ஏரி இருக்கிறது, புழல் ஏரி இருக்கிறது. அதைச் சுற்றி நல்ல பூங்காக்கள் அமைத்து, கொடைக்கானல், உதகையில் இருப்பது போன்று பூங்காக்கள் அமைத்து, கொடைக்கானலில் எப்படிப் பயணிகளை ஈர்க்கிறார்களோ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மத நல்லிணக்கத்தின் அடிப்படையில் திருத்தணி முருகனைப் பற்றி ஏதோ கேள்வி கேட்கப் போகிறீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் செங்குன்றம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். சரி, சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்: எனவே, மக்களைக் கவரும் வகையில் சுற்றுலாத் துறை மூலமாக அங்கே படகுப் போக்குவரத்து அமைக்கவும், மாணவர்களைக் கவருகின்ற வகையில் அங்கே சிறுவர் பூங்காவை அமைக்கவும் ஆவன செய்வார்களா என்றும், செங்குன்றம் ஏரிப் பகுதியிலும் இவற்றை அமைக்க ஆவன செய்வார்களா என்றும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் ஏரியில் எந்த அளவுக்கு வசதிகள் இருக்கின்றன என்பது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை

முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா, 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கை

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப் பற்றிய Point of Privilege. நேற்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவங்கள் குறித்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, இட்டுக்கட்டிய, வடிகட்டிய ஒரு கற்பனைக் கதையைச் சொல்லி அது எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிதாக வந்திருக்கிறது. சபாநாயகர் அவர்களே ஒருதலைபட்சமாக நடந்துகொண்டதாகவும், மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தாக்கப்படவே இல்லை, அதற்கும் தாமரைக்கனிக்கும் சம்பந்தமே இல்லை என்றும், பின்னாலே வந்த எம்.எல்.ஏ-க்கள் குதித்து, அவர் மேலே ஏறி, அவரே விழுந்து அதன் காரணமாக அடிபட்டார் என்றும் தெரிவித்துள்ளார். நல்ல வேளையாக பக்கத்தில் உள்ள அமைச்சர்கள் குத்தியதால் காயம் வந்தது என்று சொல்லாமல் பெருந்தன்மையாக எம்.எல்.ஏ.-க்கள் வந்து அவர் மேல் ஏறியதாலே, அவர் விழுந்து காயம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையை நீங்கள் பார்த்தால் இது Privilege-ஆக எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் என்பது தெரியும். சட்டமன்றத்திலே இருக்கிறபோது எல்லா உறுப்பினர்களும் பார்த்தார்கள்; பத்திரிகையாளர்கள் பார்த்தார்கள்; அரசு அதிகாரிகள் பார்த்தார்கள்; பார்வையாளர்கள், மேல் மாடத்திலிருந்து பார்த்தார்கள். இப்படி எல்லோர் கண் முன்பும் நடந்த ஒரு சம்பவத்தை, எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லி, அடிக்கவில்லை என்று சொல்லி, அதுபோல் அவர் அடிபட்டதையும்